[23rd September 1961

Agricultural labourers

* 1746 Q.—Sri V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேளாண்மைத் தொழிலாளர்களின் மோசமான வேலை நிலைமை குறைவான வாழ்க்கை நிலைமை முதலியவைகளை தீர்த்து வைக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

(இ) எப்பொழுது முதல், விவரமென்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The characterisation made in this part of the question is not accepted.

(*b*) The schemes now being implemented by the Government in the Community Development and National Extension Service areas and through Co-operative Societies are designed to benefit, along with others, the agricultural workers and the ryots in general. No scheme for the exclusive benefit of the agricultural workers is under the consideration of the Government.

Sri V. K. KOTHANDARAMAN : இரண்டு நாளைக்கு முன்னால் மேஜையின்மேல் வைக்கப்பட்ட ஸ்டேட்மென்டில் கூறப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளருடைய வருவாய் 1951-ஆம் ஆண்டில் இருந்ததைவிட 1959–60-ல் 4 சத விகிதம் குறைவு என்று. இந்தமாதிரியான நிலைமையில் விவசாயத் தொழிலாளர்களுடைய மோசமான நிலைமையைப் போக்குவதற்கு எந்த வகையில் தீவிரமான நடவடிக்கை எடுக்க சர்க்கார் முயற்சி செய்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இரண்டு நாட்களுக்கு முன்னால் கொடுக்கப்பட்ட புள்ளி விவரத்தில் விவசாய தொழிலாளர்களுடைய குறைந்தபட்சக் கூலி விகிதம் அதிகமாயிருக்கிறது என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிலம் இல்லாத விவசாயிகள் குத்தகை கூட்டுறவுச் சங்கங்களிலே பயிரிடுகிறார்கள். நிலம் இல்லாவிட்டாலும் பயிரிடுகிறவர்களுக்கு கடன் வசதி கொடுக்கப்படுகிறது. காலனி சொஸைடிகளில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இன்னும் பால் பண்ணை, கோழிப் பண்ணை முதலான வசதிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பல வழிகளில் அவர்கள் நலன் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது.

Oil (Russian)

* 1747 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Centre has requested this Government to get cheap Russian oil for Government purposes; and

(*b*) the sources from which oil is obtained for our transports and how?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) At present, H.S.D. oil is purchased from—

(i) Messrs. Burmah Shell Oil Storage and Distribution Company of India, Limited;

(ii) Messrs. Standard Vaccuum Oil Company, Limited; and